பெரியார் பல்கலைக்கழகம்
PERIYAR UNIVERSITY
State University - NAAC 'A++' Grade - NIRF Rank 94
State Public University Rank 40 - SDG Institutions Rank Band: 11-50
SALEM - 636 011, TAMIL NADU, INDIA.

பேராசிரியர் K. முருகேசன்
தேர்வாணையர் (பொ.)

க.எண்.பெ.ப/தேஆ/CRE-V/Nov-2025 Exam/ 2025-13 நாள்: 07.11.2025

பெறுநர்

முதல்வர்கள்

பெரியார் பல்கலைக்கழக இணைவு பெற்ற அனைத்துக் கல்லூரி.

அன்புடையீர்,

பொருள் : தேர்வாணையர் அலுவலகம் – நவம்பர் 2025 பருவத்தேர்வு – பெரியார் பல்கலைக்கழக இணைவு பெற்ற கல்லூரிகளில் 08.11.2025 அன்று நடைபெறவுள்ள அனைத்து எழுத்துத் தேர்வுகள் தேதி மாற்றம் செய்தமை – தகவல் தெரிவித்தல் – தொடர்பாக.

பார்வை : 1. இவ்வலுவலகக் குறிப்பாணை நாள்: 15.10.2025
2. மேலாண்மை இயக்குநர், சென்னை அவர்களின் மின்னஞ்சல் கடிதம்

* * *

பார்வை (1)இல் கண்டுள்ள இவ்வலுவலகக் குறிப்பாணையின் படி, பெரியார் பல்கலைக்கழக இணைவு பெற்ற கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் இளநிலை, முதுநிலை மாணாக்கர்களின் நவம்பர்–2025–ஆம் பருவத்தேர்விற்கான கால அட்டவணை (Time Table) தயார் செய்யப்பட்டு அனுமதி பெறப்பட்டு கல்லூரிகளுக்கு மின்னஞ்சல் வாயிலாக அனுப்பிவைக்கப்பட்டது.

பார்வை (2)இல் கண்டுள்ள நான் முதல்வன் மேலாண்மை இயக்குநர், சென்னை அவர்களின் அறிவுறுத்லின் படி, 08–11–2025 அன்று கல்லூரி மாணாக்கர்களின் வேலைவாய்ப்பு நலன் கருதி நான் முதல்வன் தொடர்பான தேர்வுகள் நடைபெறுவதாகவும் அன்று நடைபெறும் தேர்வுகளை மாற்றம் செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

எனவே, நான்முதல்வன் மேலாண்மை இயக்குநர் அவர்களின் கடிதத்தின்படியும் மற்றும் கல்லூரி மாணாக்கர்களின் நலன் கருதியும் 08–11–2025 அன்று நடைபெறவுள்ள பல்கலைக்கழக எழுத்துத்தேர்வுகள் அனைத்தும் 05–12–2025 அன்று நடைபெறும் எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. இதனை உரிய துறைகள் மற்றும் மாணாக்கர்களுக்கு தெரியப்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

07.11.2025

தேர்வாணையர்(பொ.)

07/11/25

Phone: 6385771444 Email – examcoe@gmail.com
Website: www.periyaruniversity.ac.in